செ.வெ.எண். 10/ஆகஸ்ட் தேதி : 08.08.2016

# பத்திரிக்கைச் செய்தி
## வேளாண்மைத்துறை தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறையில் காலியாக உள்ள கிடங்கு காவலர் பணியிடங்கள் மொத்தம் 14 (ஆண்கள்–9, பெண்கள் (ஆதரவற்ற விதவைகள்) –5 எண்களை இன சுழற்சி முறையில் கீழ்காணும் விவரப்படி, தற்காலிகமாக நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளது.

| இன விவரம் | பெண்கள் (ஆதரவற்ற விதவை) | | ஆண்கள் | | |
|---|---|---|---|---|---|
| | **(P)** முன்னுரிமை | **(NP)** முன்னுரிமை –யற்றவர் | **(P)** முன்னுரிமை | **(NP)** முன்னுரிமை –யற்றவர் | மொத்தம் |
| (SC) (அருந்ததியர்) | 1 | – | – | – | 1 |
| (OC) பொது | – | 1 | 1 | 2 | 4 |
| (MBC)மிகவும்பிற்படுத்தப்பட்டவர் | – | 1 | 1 | 1 | 3 |
| (BC) பிற்படுத்தப்பட்டவர் (முஸ்லீம் தவிர) | – | 1 | 1 | 2 | 4 |
| (SC) ஆதிதிராவிடர் | – | 1 | 1 | – | 2 |
| **மொத்தம்** | **1** | **4** | **4** | **5** | **14** |

எனவே, தகுதியான ஆண் மற்றும் ஆதரவற்ற விதவைகளிடமிருந்து 24.08.2016 அன்று மாலை 5.30 மணிக்குள் உரிய விண்ணப்ப படிவத்தில் (மாதிரி படிவம் அலுவலக தகவல் பலகையில் உள்ளது) அலுவலக வேலை நாட்களில் நேரடியாகவோ (அ) அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தோல்வி. நல்ல உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் தமிழ் நன்கு எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். விண்ணப்ப படிவத்தில் கீழ்க்கண்ட ஆவணங்களின் XEROX இணைக்கப்படவேண்டும்.

1. கல்விச்சான்று.
2. வேலைவாய்ப்பு பதிவு அட்டை.
3. முன்னுரிமை பெற்றவராயின் அதற்கான சான்று.
4. சாதிச்சான்று.

ஆதிதிராவிடர், அருந்ததியர் வகுப்பினர் அதிகபட்ச வயது 01.01.2016 அன்று 35 வயதுக்குள் இருக்க வேண்டும். மிகவும் பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் அதிகபட்ச வயது 01.01.2016 அன்று 32 வயதுக்குள் இருக்க வேண்டும் இதர வகுப்பினர் அதிகபட்ச வயது 01.01.2016 அன்று 30 வயதுக்குள் இருக்க வேண்டும். மேற்படி அனைத்து இனங்களுக்கும் குறைந்தபட்ச வயது 18 நிரம்பியர் ஆக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி.**

வேளாண்மை இணை இயக்குநர்,
மாவட்ட ஆட்சியரக வளாகம் பின்புறம்.
தருமபுரி–636705.

மேற்கண்ட பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.